SUPPLEMENT TO THE CATHOLIC GUARDIAN

# சத்தியவேத பாதுகாவலன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

Telegram : "GUARDIAN" JAFFNA. Telephone : No. 100.

வெள்ளிக்கிழமைதோறும் பிரசுரமாகும்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

70-ம் புத்தகம் 38-ம் இல. யாழ்ப்பாணம் 1945-ம் ஆண்டு ஐப்பசிமாசம் 5-ந் திகதி வெள்ளிக்கிழமை—பிரதி சதம் 5

## சுதேச வர்த்தமானம்

**கைவிடப்பட்ட இருப்புப்பெட்டிகள்**—யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவாரம் புதன்கிழமையிரவு கொழும்புக்குப்போன தபால் றெயின்வண்டியிலே பெண்பிள்ளைகளுக்குரிய இரண்டாம்வகுப்புப் பெட்டி ஒன்றில் கொடிகாமத்திலே வைக்கப்பட்டதாகக் கொள்ளப்படும் இரு இருப்புப்பெட்டிகளை வல்லுவெட்டித்துறையைச்சேர்ந்த மதுபரிபாலன உத்தியோகஸ்தர்கள் இருவர் கொழும்புக்கோட்டை ஸ்றேஷன் வரையிலுள்ள 225 மைல் தூரப் பிரயாணத்திலும் விழிப்பாகக் காவல்செய்துகொண்டுபோனார்கள். றெயின்வண்டி கோட்டைஸ்றேஷன்போய்ச் சேர்ந்தபிறகும் அப்பெட்டிகளை எவருமே எடுத்துச்செல்லவில்லை. அதனால், இருபெட்டிகளும் கொழும்புத்துறைமுக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவே, அவர்கள் திறந்து பரிசோதித்தவிடத்து அவற்றினுள் 21,000 ரூபா பெறுமதியான 93½ றுத்தல் கஞ்சாவும், அபினும் இருக்கக் கண்டறியப்பட்டன. இவைகள் கஞ்சா அபின் கள்ளவியாபாரம் நடத்துகின்ற வல்வெட்டித்துறையாருடையனவென்று சொல்லப்படுகிறது.

**தண்ணீர்க் கஷ்டம்**—ஊர்காவற்றுறையிலே தண்ணீர்ப்பஞ்சம் மிகக்கடுமையாயிருக்கிறது. அதனால் நமது வடமாகாண ஏசன்றர் அங்கு பலலொறிகளில் தண்ணீர் ஏற்றிப்போய் உதவுதற்கான ஒழுங்குகள் செய்திருக்கின்றார். இந்தத் தண்ணீர்க்கஷ்ட நிலைமையை நிவாரணஞ் செய்யுமாறு ஊர்காவற்றுறையிலுள்ள தலைமையான மனுஷர்கள்சேர்ந்து தலதாபனஆட்சிக் கொம்மிஷனருக்கும், அரசாங்கசபையிலே அப்பகுதிப் பிரதிநிதியான ஸ்பீக்கருக்கும் மனுப்பண்ணியிருக்கின்றார்கள். அதன்பேரில் அவசியம் வேண்டிய விசாரணைகள் நடத்துதற்கும் அங்கு நல்லகுடிதண்ணீர் உதவும்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஆரம்பவேலைகளை துரிதப்படுத்துதற்குமாகக் கொம்மிஷனர் எஞ்ஞீயர் ஒருவரை அனுப்பிவைத்திருக்கின்றார். இதற்கேற்படும் செலவுக்கென்று அரசாங்கசபை கடன்நிதியிலிருந்து ஆயிரம்ரூபா உதவியிருக்கின்றது.

**பெற்ரேல்கட்டுப்பாடு**—எண்ணெய்க் கப்பல்களின் வரத்துக்குறைவாலே இலங்கையில் பெற்ரேல் இப்போது குறைவாயிருக்கின்றதாம். ஆனால், அதிகம் சமீபகாலத்திலே அதிகமான எண்ணெய்க்கப்பல்கள் கிரமமாகக் கொழும்புகண்டு பெற்ரேல் இறக்கிப்போவதற்கான ஒழுங்குகளை அரசினர் செய்யவிருக்கின்றனர் அதனால் இன்னும் மூன்றுமாசத்தில் போதிய பெற்ரேலை இருப்பில் வைத்துக்கொள்ளலாமென்றும், அப்போது பெற்ரேல் கட்டுப்பாட்டை நீக்கிவிடமுடியுமென்றும் நம்பப்படுகிறது.

**ரையர் கட்டுப்பாடு**—வருகிற மார்கழி மாசத்துடன் மோட்டர்கார் ரையர்களின் நிலைமை அதிகம் திருப்திகரமாய் இருக்குமெனத் தெரியவருகிறது. இந்திய அதிகாரிகள் கொடுக்கும் அளவுதொகையைவிட வேறாகவும் 4,000 ரையர்கள்கொடுக்கவிருக்கின்றனர். நமது அரசினர் அவைகளைஏற்றுக்கொண்டு மேலும் 5000 ரையர்கள் கேட்டுள்ளனர். இவைகளையும் இந்திய அதிகாரிகள் கொடுக்கச் சம்மதித்திருக்கின்றனர். அதனால் ரையர்களின் நிலைமையும் இன்னும் மூன்றுமாசத்தில் திருப்திகரமாகிவிடவே, வருகிறமார்கழிமாசத்தில் ரையர் கட்டுப்பாட்டையும் நீக்கிவிட முடியுமென நம்பப்படுகிறது.

**கொம்மிஷனின் அறிக்கை**—இலங்கையிலே அரசியற்றிருத்தவிசாரணை நடத்திப்போன சோல்பெறி கொம்மிஷனின் அறிக்கைப் பிரதிஒன்று ஏலவே நம்தேசாதிபதிக்குக் கிடைத்துவிட்டதெனவும், அது இன்னும் சிலதினங்களில் பிரசித்தஞ்செய்யப்படுமெனவும் அறிகின்றோம்.

**மல்லாக நீதிபதி**—வதுளை உதவிடிஸ்திறிக் நீதிபதியாய் இருந்துவருகிறவரான திரு. ஏ. ஜயரட்ண அவர்கள் மல்லாக-ஊர்காவற்றுறைக் கோடுகளின் நீதிபதியாக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். திரு. ஏ. சி. சற். விஜெரட்ண மல்லாகத்திலிருந்து வதுளைக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்.

**ஒரு தென்னமரத்தால்**—மாத்தளையைச்சேர்ந்த வீரகாம எனும் கிராமத்திலே ஒரு தென்னமரத்தின் உரிமையை யிட்டு அப்புகாமிஎன்பவனுக்கும் அவனது உடன்பிறந்த சகோதரனுக்குமிடையே சச்சரவுண்டானபோது, அப்புகாமி கோபங்கொண்டு தன் சகோதரனைக் கொன்றுவிட்டான். இக்கொலைவழக்கு இப்போது கண்டிச் சுப்பிறீங்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கிறது.

**சேமிப்பு இயக்கம்**—இலங்கையிலே நடைபெற்றுவந்த யுத்தசேமிப்பு இயக்கம் நிகழும் ஐப்பசிமாசம் 1-ந்திகதி தொடக்கம் தேசீய சேமிப்பு இயக்கமென்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. இந்தப் பெயர்மாற்றத்துடன் தேசீயவிருத்திக்கடனென அன்றுமுதல் 20 கோடி ரூபா சேகரிக்கப்படவிருக்கிறது.

**கள்ளப்புடவைக் கூப்பன்கள்**—கொழும்பிலே ஒருவாரத்தில் வியாபாரிகள் புடவைவிற்றுக்கொண்டுபோய்ப் புடவைக் கூப்பன்வங்கியில் ஒப்படைத்த கூப்பன் புள்ளிகளில் 18,000 வரையிலே கள்ளக் கூப்பன் புள்ளிகளெனக் கண்டறியப்பட்டிருக்கிறது. அதனால், வருகாலத்திலே புடவை வியாபாரிகள் கள்ளப்புடவைக் கூப்பன்கள் கொண்டுவந்து ஒப்படைக்குமிடத்து அவர்களுடைய லைசென்ஸ்சுகள் நீக்கிவிடப்படுமென அதிகாரிகள் எச்சரித்திருக்கின்றனர்.

**இந்திய ஓடுகள்**—இந்தியாவிலிருந்து ஓடுகள் இறக்குமதிசெய்ய இனிமேல் லைசென்ஸ் தேவையில்லையென்று அரசினர் பிரசித்தஞ்செய்திருக்கின்றனர். ஆனால், அவைகளை இறக்குமதி செய்கிறவர்கள் இறக்குமதிக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு மனுப்பண்ணுமிடத்து நியாயமான தொகைக்கு இன்றியமையாதனவென்று அவர் சேட்டிபிக்கேற் வழங்குவார். மேலும் இலங்கைக்கு ஓடுகள்ஏற்றிவரும் தோணிகளுக்கு இருந்துவந்த கட்டுப்பாடும் நீக்கப்பட்டுவிட்டது.

**பொதுவுடைமை முழக்கம்**—இலங்கைப் பொதுவுடைமைக்கட்சி நடத்திய மகாசன கூட்டமொன்றிலே சென்ற ஞாயிற்றுக்கிழமைஇரவு கொழும்பு நகரமண்டப மைதானத்தில் ஆடவர்களும் ஸ்திரீகளுமான தொழிலாளிகளாய்ச் சுமார் எண்ணாயிரம்பேர் ஒன்றுகூடினார்கள். அதிலே சோல்பெறி கொம்மிஷனின் அறிக்கையைத் தள்ளிவிட வேண்டுமென்றும், அந்த அறிக்கையைப்பற்றி ஆலோசிக்கமுன்னரே பொதுத்தேர்தல் நடத்த வேண்டுமென்றும் ஆர்ப்பரித்துப் பெருமுழக்கம் செய்யப்படலாயிற்று. ஆனால், இவ்விரண்டும் நடக்கக்கூடிய காரியமல்ல.

**சாப்பாட்டுப்பிணக்கு**—குருநாகலைச் சேர்ந்த அம்பாத்தென்னே எனுங் கிராமத்திலே உக்குவா எனும் ஒருவன் தக்கமாதிரியாகத் தனது சாப்பாட்டைச் சரிப்பண்ணிக் கொடுக்கவில்லை என்பதையிட்டுக் கோபாவேசங்கொண்டவனாய் ஓர் துப்பாக்கிகொண்டு தனது மனைவியைச் சுட்டுக்கொன்றுவிட்டான். இவன் குருநாகல் சுப்பிறீங்கோட்டிலே விசாரணை செய்யப்பெற்றுக் கொலைக்குற்றவாளியாகிச் சென்ற வாரம் மரணதண்டனை விதிக்கப்பட்டனன்.

## நானு சங்கதிகள்

—இந்த மாரிகாலத்திலே யப்பானில் பயங்கரபஞ்சம் உண்டாகும் என்பதற்கான அறிகுறிகள் பல காணப்படுகின்றனவாம். அத்தாலே 80 லட்சம் சனங்கள் வரையில் பட்டினியால் மடியலாமென்று சுங்கிங் நகரிலிருந்து செய்தி வெளியாயிருக்கிறது.

—யப்பான் யுத்தத்தில் இறங்கியபோது, அதன்போக்குவரத்து, றெயில்வே மந்திரியாயிருந்த அட்மிறல் ரெருஷிமா என்பவரும் கைதுசெய்யப்பட்டுவிட்டனர். அப்போதிருந்த யப்பானிய மந்திரிமார்களில் இன்னமும் கண்டறியப்படாதிருப்பவர் இருவர் மாத்திரமே.

—யப்பானிய யுத்தம் முடிந்தபின் முதன்முதலாகச் சென்ற 26-ந்திகதி சிங்கப்பூரிலிருந்து ஒரு கப்பல் இருநூறு தொன் றப்பர் ஏற்றிக்கொண்டு பிரித்தானிக்குப் பயணமாயிருக்கிறது. இது யப்பானியர் அங்கு சேமித்து வைத்திருந்த எண்ணூயிரம் தொன்றப்பரில் ஒருபகுதியாகும்.

—ஜேர்மனிய கப்பல்களையெல்லாம் மூன்றுபாகமாகப் பிரித்துப் பிரித்தானி, ருஷியா, அமெரிக்க ஐக்கியதேசம் ஆகிய முப்பெரும் அரசுகளுக்கும் கொடுபடவேண்டுமென்று பேர்லின்நகர் மகாநாட்டிலே தீர்மானிக்கப்பட்டதாக அமெரிக்க பிரசாதிபதி அறிவித்திருக்கின்றார்.

—மலாய்நாடுகள் அடுத்த பன்னிருமாசங்களிலும் இரண்டுலட்சம் தொன்னுக்கு மேற்பட்ட றப்பர் ஏற்றுமதிசெய்ய முடியுமென்று இப்போது கண்டறியப்பட்டிருக்கிறது. இத்தொகை இலங்கை ஏற்றுமதிசெய்யும் றப்பரின் மொத்தத் தொகையிலும் கூடியதாகும்.

—ஜேர்மனியர் தங்களிடமுள்ள தங்கம் வெள்ளி, குருலோகம் முழுவதையும் ஒப்படைத்துவிட வேண்டுமென்றும், மற்றும் பிறதேச நோட்டுகள், தங்கம் ஆதியவற்றையும் கொடுத்துவிட வேண்டுமென்றும் ஜேர்மனியை ஆதீனப்படுத்தியுள்ள ஐக்கிய அரசுகளின் கொம்மிஷன் ஆஞ்ஞாபித்திருக்கிறது.

—பிரித்தானிய புதிய பாளிமேந்தின் அங்கத்தவர்களாகக் கத்தோலிக்கர் 15 பேரே தெரியப்பட்டிருக்கின்றார்கள். இவர்களில் 8 பேர் தொழிற்கட்சியையும் 6 பேர் பரம்பரைக்கட்சியையும், ஒருவர் சுதந்திர தொழிற்கட்சியையும் சேர்ந்தவர்கள்.

—பிரித்தானிய பழையபாளிமேந்திலே கத்தோலிக்க அங்கத்தவர்களாய் 21 பேர் இருந்துவந்தார்கள். பரம்பரைக்கட்சி இம்முறைத் தேர்தலில் அடைந்துள்ள பெருந்தோல்வியே கத்தோலிக்கர் தொகை குறைவுபடக்காரணமாகும்.

—ஸ்பானியதேச கத்தோலிக்க ஐக்கிய முயற்சியின் தலைவராய் விளங்கியிருந்தவரான டொன் அல்பேட்ரோ மாட்டீன் ஆட்ராஜோ அவர்கள் ஸ்பானியஅரசின் புதிய பிறதேசகாரிய மந்திரியாராக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கிறார்.

—ஆஸ்திறேலியாவின் புதிய பிரதம மந்திரியாராகச் சமீபத்திலே நியமனஞ் செய்யப்பெற்றவரான திரு. சிவ்லி அவர்கள் ஓர் உத்தம கத்தோலிக்கர். இவர் தினமும் தமது உத்தியோக கடமைகளைத் தொடக்குமுன் ஒழுங்காகத் திவ்விய பூசைகண்டு திவ்விய நன்மைபெறும் வழக்கமுடையவர்.

**சிங்கப்பூர் வங்கிகள்**—சிங்கப்பூரிலே நான்கு வங்கிகள் மறுபடியும் திறக்கப்பட்டுக் கொடுக்கல்வாங்கல் ஆதியாம் கருமம்பார்க்கத் தொடங்கியிருப்பதாய்ச் செய்திகிடைத்திருக்கிறது. இந்திய சாட்டேட்வங்கி, ஹொங்கோங்-ஷாங்காய்வங்கி, இந்திய மேர்க்கன்ரைல்வங்கி, ஈஸ்ரேண் வங்கி என்பனவே அந்நான்கு வங்கிகளுமாகும்.

—இந்த இரண்டாவது உலகயுத்தம் தொடங்குமுன் ஜேர்மனி முழுவதிலும் ஏறக்குறைய 12,000 கத்தோலிக்க கோவில்களும், கிட்டத்தட்ட 18,000 புறொட்டெஸ்தாந்த கோவில்களும் இருந்துவந்தனவென்று கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது.

—ஐம்பதினாயிரம் பேருக்கு மேற்பட்ட குடிசனங்களைக்கொண்ட ஜேர்மன் நகர்களிலுள்ள கோவில்களிலே நூற்றுக்கு 80 முதல் 90 வீதத்துக்கு இடைப்பட்ட தொகையான கோவில்கள் ஐக்கியவிமானத் தாக்குதல்களாலே பாழடைந்தும், வெகுவாகச் சேதமடைந்துமிருக்கின்றனவாம்.

—ஜேர்மனியிலுள்ள கத்தோலிக்கர் 2 கோடியே 30 லட்சம்பேர் வரையிலாகும். இவர்களில் 95 லட்சம்பேர் அங்கு பிரித்தானிய ஆதீனபகுதியிலும், 70 லட்சம்பேர் அமெரிக்க ஆதீனபகுதியிலும், 40 லட்சம்பேர் ருஷிய ஆதீனபகுதியிலும் 20 லட்சம்பேர் பிராஞ்சிய ஆதீனபகுதியிலும் இருக்கிறார்கள்.

—கீழ்திசையிலுள்ள ஒரேயொரு கத்தோலிக்க தேசமாகிய பிலிப்பைன்தீவுகளிலே யப்பானியரால் திருச்சபைச்சொத்துகளுக்கு ஏற்பட்டிருக்கும் சேதமும் அழிவும் மூன்றுகோடிபவுண் வரையிலென மதிப்பிடப்படுவதாய் மனிலாநகரிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

—பிலிப்பைன் தீவுகளின் தலைப்பட்டணமாகிய மனிலாநகரின் பகுதியில்மாத்திரம் 47 கோயில்கள், குருமனைகள், கலாசாலைகள் ஆதியன யப்பானியராலே நிர்மூலமாக்கப்பட்டிருக்கின்றனவாம். இவைகளெல்லாம் அவர்களால் வேண்டுமென்றே அழிக்கப்பட்டனவாம்.

—ஆஸ்திறேலியாவின் புதிய பிரதம மந்திரியாரான திரு. யோசெவ் சிவ்லி அவர்கள் அரசாங்கத்திலே உயர்ந்தபதவி வகித்தபோதிலும் 1914-ம்ஆண்டு அவர் விவாகஞ்செய்தபோது பதேர்ஸ்ற்நகரில் வசிக்கத்தொடங்கிய அதே சிறியவீட்டில் தானே இன்னமும் சஞ்சரித்துவருகின்றார்

—கனடாதேச குவெபெக்நகர் அதிமேற்றிராசனத்திலே சென்ற 1944-ம் ஆண்டில் சுமார் 280 நகரசங்க டிஸ்திறிக்குகள் திரு இருதய ஆண்டவருக்குப் பகிரங்கமாக நேர்ந்து ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. சங்ககூட்டங்கள் எப்போதும்செபத்துடனேயே ஆரம்பமாகின்றன.

—கனடாதேச குவெபெக் நகரிலுள்ள லவால் சர்வகலாசாலையுடன் இணைந்துள்ள பன்னிரு கல்லூரிகளிலும் சமீபத்திலே பட்டதாரிகளான 315 மாணவர்களிலும் 125 பேர் குருப்பட்டத்துக்குப் படிக்க ஆயத்தப்படுகின்றார்கள்.

—சீனதேசம் இப்போது 45 லட்சம் கத்தோலிக்கரையும், நூறு மேற்றிராணிமார்களையும், 36 அப்போஸ்தொலிக்கதலைவர்களையும் கொண்டிருக்கிறது. நூறு மேற்றிராணிமார்களுள்ளும் முப்பதுபேர் சீனச் சுதேச மேற்றிராணிமார்களாவர்.

—சீனதேசத்திலே கத்தோலிக்க மிஷன்களுக்குத் தனிப்பட்ட மகாபெரும் கொடையாளர் ஓர்புறொட்டெஸ்தாந்தரேயாம். சீனஅரசின் பிரதம தலைவரான சியாங் காய்-ஷெக் அவர்களே அந்தப் பெரிய கொடைவள்ளலாவர்.

—மகாவந். யு-பின் எனும் சீனப்பிரபல கத்தோலிக்க மேற்றிராணியாரைச் சியாங் காய்-ஷெக்அவர்கள் ஏறக்குறைய பன்னிருதடவைகளிலே சந்தித்துப்பேசியவிடத்து அவருக்குத் தமதுசொந்தப்பணத்திலிருந்து மொத்தமாகப் பத்து லட்சம் சீனடலர் உபகரித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் ஞானஒடுக்கம்

[..]மருதமடுத் திருப்பதியிலே நடை[..]றவிருக்கும் ஞானஒடுக்கத்தில் பங்கு[..]றும் ஆசிரியர் தயைசெய்து கவனி[..]கவேண்டியன:

1. யாழ்ப்பாணத்திலிருந்து மன்னுருக்குப் பகற்கோச் இல்லை. ஆகவே ஆசிரியர் செவ்வாய்க்கிழமை இராக்கோச்சில் பயணம்பண்ண வேண்டியது. மடுரேட்டிலிருந்து மடுவுக்குப் போவதற்கேற்ற பயணவசதி செய்யப்படும்.

2. ஆசிரியர் தலையணை, போர்வை முதலியன கொண்டுபோகவேண்டும். பாய்கள் அங்கே கிடைக்கும்.

3. ஞானவாசினைக்கேற்ற புத்தகங்கள் கைவசமிருப்பின் அவற்றைக் கொண்டுசெல்லுதல் மிகவும் விரும்பத்தக்கது.

4. ஞானஒடுக்கத்துக்கு ஆசிரியர் போவதால் பாடசாலைகளை நடாத்தமுடியாதிருப்பின் அப்பாடசாலைகள் 10-10-45 தொடக்கம் 15-10-45 முடிய மூடப்படலாம்.

J. EMILIANUS PILLAI, O.M.I.
General Manager of
R. C. Schools,
Jaffna 3-10-45.

---

## கரையூர், விவாக இலாபநிதிச் சங்கம் (லிமிற்றெட்)

கரையூர், விவாக இலாபநிதிச்சங்கத்தின் வருடாந்த பொதுகூட்டம் நிகழும் 1945-ம்ஆண்டு ஐப்பசிமாசம் 7-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆறுமணிக்கு சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் சந்தியோகுமையோர் ஆண் பாடசாலையில் நடந்தேறும்.

---

## நன்றியறிந்தஸ்தோத்திரம்

அற்புதவரத்ததரான அர்ச். ஆரோக்கியநாதரிடம் நான் கேட்ட மன்ருட்டு கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். அவரின் நாமம் புகழப்படுவதாக.

யாழ்ப்பாணம் A. A.

---

# சத்தியவேத பாதுகாவலன்

1945-ம் ஆண்டு
ஐப்பசிமாசம் 5-ந்திகதி

---

## ஹிற்லரும் துணியாச்செயல்

திருவாங்கூர்த் திவானுகிய சேர் இராமசாமி ஐயர்அவர்கள் சங்கணுச்சேரிக் கத்தோலிக்க மேற்றிராணியார் தமது கிறீஸ்தவர்களுக்குவிடுத்தமேய்ப்பர்நிருபமொன்றை மறுத்துவிடவேண்டுமென்றும், அதற்காக மன்னிப்புக்கேட்கவேண்டுமென்றும் ஆஞ்ஞாபித்திருந்தார் இவருடைய அடாத்தான செயலை மிகவும் காரசாரமாகக் கண்டனஞ்செய்து சென்னை ஆதிமேற்றிராணி ஆண்டவரவர்கள் பின்வருமாறு எதிர்பேசியிருக்கின்ருர்.

"சங்கணுச்சேரி மேற்றிராணியார் சென்ற ஆவணிமாசம் 15-ந்திகதி தமது கிறீஸ்தவர்களுக்கு விடுத்த நிருபத்தை மறுத்துவிடவேண்டுமெனவும், அதனை வெளியிட்டதற்காக மன்னிப்புக்கேட்கவேண்டுமெனவும் திருவாங்கூர் அரசினர் கேட்டிருக்கிருர்கள் என்பதை நாம் பெரிதும் பிரமிப்புடன் அறிகின்ருேம். உண்மையை ஒருபோதும் மறுத்தல் ஆகாது. அதை வெளியிட்டதைப் பற்றி மனஸ்தாபப்படுதலும் கூடாது. சர்வாதிகாரிகளுள்ளே மகாதுஷ்டனுன சர்வாதிகாரியாகிய ஹிற்லர்தானும் கத்தோலிக்க மேற்றிராணிமாரிடம் இவ்வித பேதமையான கேள்வியைக்கேட்கத் துணியவில்லை. மியூனிச்நகர அதிமேற்றிராணியாரான கருதினுல் பவுல்காபர் ஆண்டவர் ஹிற்லருடையவும் நாஸிய அதிகாரிகளுடையவும் சீர்கெட்ட அரசியல்முறைகளைக்கடிந்து நிருபங்கள் வெளியிட்டிருக்கிருர். அஞ்சாநெஞ்சரான திருச்சபைப் பிரபுவாகிய இந்தக் கருதினுல்ஆண்டவர் தமது நிருபங்களை மறுத்துவிடவேண்டுமென்ருே அவற்றிற்காக மன்னிப்புக்கேட்கவேண்டுமென்ருே ஹிற்லராவது வேறெந்த நாஸிய அதிகாரிகளாவது அவருக்குக் கட்டளையிடத் துணியவேயில்லை. ஒவ்வொருவரும் தமது மனச்சாட்சியிலே மெய்யென்றுநம்பும் அபிப்பிராயங்களை வெளியிடும் சுதந்திரமும், சுயாதீனமும் திருவாங்கூரிலும்பார்க்க ஜேர்மனியில் கூடுதலாயிருந்தனவா? நாஸியஅரசின் கொடுங்கோல்முறைகள் செங்கடலைக் கடந்து இந்தியாவுக்கும்வந்து தாண்டவமாடத் தொடங்கிவிட்டனவா?

"ஒரு மேற்றிராணியார் தமது நீதியான முறையீடுகளைத் தெளிவாயும், சுட்டிப்பாயும் வெளியிட்டால், அது தேசப்புரட்டல்களையும், வலோற்[..]ரச் செயல்களையும் தூண்டிவிடுவெ[..]ன்று முற்றும் கருவிடைநிறைந்தகரு[..]த அவர் கூற்றுக்களுடன் பொருத்த[..]ட எத்தனிக்கின்ருர்கள். சங்கணுச்சேரி மேற்றிராணியாரின் நிருபத்தை ந[..]ம் சென்னையிலும் விரைவிலே வெளி[..]டுவோம். அப்போது நமது சகோதர மேற்றிராணியார் ஒருவரிடம் திருவாங்கூர் அரசினர் கேட்டிருக்கும்கேள்வி எத்துணை அடாத்தான கேள்வியென்பதை அந்நிருபத்தை வாசிக்கும் அறிவாளிகள் சகலரும் நன்குணருவார்கள்.

"சட்டநிரூபணசபைகளாலோ, அரசினராலோ எமக்கு நிகழக்கூடிய அச்சங்களையும், மனக்கிலேசங்களையும் தெளிவாக வெளியிட எமக்குப் பூரண உரிமையுண்டு. இந்த உரிமையை அழித்துவிடுகிருேமெனச் சபதங்கூறி எவராவது முற்படின் அவர்களுடைய சபதத்தை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்ருேம். தேவனின் உரிமைக்காகவும், திருச்சபையின் உரிமைக்காகவும் வாதாட நாம் எப்போதும் ஆயத்தமாயிருக்கிருேம். சனநாயக உரிமைகளுக்காக நாம் இரண்டு மகா யுத்தங்களில் போராடியிருக்கிருேம். எவராலும் அழிக்கமுடியாத எமது சத்தியவேத மூலாதார விதிகளுக்காக நாம் சட்டமுறைகளைத்தழுவிப் போராட இன்னும் ஆயத்தமாகவே இருக்கின்ருேம். இப்படி நாம் வாதாடுமிடத்து எமது செயல்களைத் தேசப்புரட்டற் செயல்களென்றும், கலகம்விளைக்கும் செயல்களென்றும் எமது விரோதிகள் அபாண்டஞ்சொல்வாரென்பதை நாம் அறிவோம். ஆனுல், எமது உரிமைகளுக்காகவும் சுதந்திரங்கள் சுயாதீனத்துக்காகவும் நாம்வாதாடி அவற்றைப் பாதுகாக்கப் பிரயாசப்படுதல் தேசப்புரட்டலுமல்ல கலகம்விளைக்கும் நோக்கமுள்ள செயலுமல்ல என்பதே சுத்தமான உண்மையாகும்".

நிற்க, கல்விவிஷயமாய் நியாயவிரோதங்கள் பொலிந்த சட்டங்கள்மட்டில் நாம் எல்லாரும் ஒத்தபடி எதிர்பேசுகின்ருேம் என்பதைப் பிரசித்தமாகத் தெரிவிக்கும் நோக்கமாய், யாழ்ப்பாணக் கத்தோலிக்கமக்கள் சென்ற 30-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணிக்குச் சென் சாள்ஸ் கலாசாலை மண்டபத்திலே செவாலியர் எஸ். அருளானந்தம் அவர்கள் தலைமையில் ஓர் பகிரங்ககூட்டம் நடத்தினுர்கள். அதிலே கல்விசம்பந்தமாகத் திருவாங்கூர் அரசினர் விதித்துள்ள அநீதமான நவீன சட்டங்களைக் கண்டனஞ்செய்து மூன்று பிரேரணைகள் ஏகமனதாக அரங்கேற்றப்பட்டன. பின்னர் அம்மூன்று பிரேரணைகளும் இந்தியஇராசப்பிரதிநிதி அவர்களுக்கும், திருவாங்கூர் மகாராஜா அவர்களுக்கும், திருவாங்கூரில் இருந்துவரும் பிரித்தானிய அரசின் பிரதிநிதிக்கும், திருவாங்கூர் திவான் அவர்களுக்கும், சென்னை அதிமேற்றிராணியாண்டவரவர்களுக்கும், சங்கணுச்சேரி மேற்றிராணியாண்டவரவர்களுக்கும், இந்தியாவிலே பிரசுரமாகும் நானுப[..]க்கும் அனுப்பிவைக்கப்பட[..]ன்றுந் தீர்மானிக்கப்படலாயிற்று.

---

# வேதப்பரப்புதல் ஞாயிறு 1945 ஐப்பசி 21

## விசுவாசப்பரப்புதற்சபைபு அதிபரின் சுற்றுநிருபம்

:o:

புதுவேதநாடுகளிலே சுவிசேஷத்தொண்டாற்றிவரும் மிஷனரிமாருக்குத் துணைபுரியும் சங்கங்களின் அதிபராகிய மகாமேன்மைதங்கிய செல்சோ கோஸ்ரன்ரினி ஆண்டவர் அவர்கள் வேதப்பரப்புதல்ஞாயிறு சம்பந்தமாகப் பின்வரும் நிருபத்தை விடுத்திருக்கின்ருர்.

உலகயுத்தத்தின் ஒருபாகம் முடிவாகிவிட்டது. இந்த யுத்தமுடிவானது புதுவேதநாடுகளுக்குத் துணைபுரியும் சபையார்சகலரும் தங்கள் முயற்சிகள் கிளர்ச்சிகள் எல்லாவற்றிற்கும் புத்துயிர்கொடுக்க வேண்டுமென்பதை நினைவூட்டுகின்றது. நாலுபக்கமும் அழிவைப்பரப்பிக்கொண்டுவந்த யுத்தசண்டமாருதம் அமர்ந்துவிட்டது. அழிவுக்குள்ளானவைகளை மீண்டும் புதிதாக அமைப்பதற்குத் தருணம்வாய்த்திருக்கின்றது. பகைவன்மங்கள் இதுவரையும்தேங்கிப் பெருக்கெடுத்துக்கொண்டு வந்தன. இப்போது சகோதர அன்பைப் பெருக்கவேண்டியகாலம் வந்துவிட்டது. யுத்தம் நிலைத்திருந்த பல வருடங்களாக எமது மிஷனரிமார் தங்கள் திருத்தொண்டுகளை நிறைவேற்றமுடியாது அங்குமிங்குமாக அலைக்கழிக்கப்பட்டார்கள். அவர்கள் திருத்தொண்டாற்றிவந்தனவும், அத்தொண்டுகளின்வழியாக ஏராளமான நன்மைகள் விளைந்தனவுமான தலங்கள் பரிதாபத்துக்குரியவிதமாய்ப் பரிநாசம் அடையலாயின. இவற்ருலே எமது மிஷனரிமார் அதைரியத்துக்குள்ளாகவில்லை. அவர்களுடைய மனுேநிலையை நோக்குமிடத்து "மாமிசம் பெலவீனப்படுகின்றது; ஆனுல், மனமோ முழுச்சம்மதங்கொள்ளுகின்றது" என நமது திருமீட்பர் சொன்ன வாக்கியத்தை நினைவுகூருகின்ருேம். "எனது குருமார் புதிய அத்திவாரத்தில் தங்கள் சுவிசேஷத்தொண்டுகளாகிய கட்டடத்தை எழுப்ப மகாஆவலுள்ளவர்கள். அவர்களின் தைரியம் ஒருசிறிதாவது குறைவுபடவில்லை" என்று ஒரு மிஷனரிய மேற்றிராணியார் நமக்கு எழுதியிருக்கிருர்.

புதுவேதநாடுகள்மட்டிலே எமது கத்தோலிக்கர் காண்பித்துவருகின்ற பிறர்சிநேகத்தை நாம் அவதானிக்குமிடத்து, முன்னெக்காலத்திலும்பார்க்க இந்த யுத்தகாலத்திற்ருன் அவர்கள் கூடுதலான உதாரகுணம் காண்பித்திருப்பதைக்கண்டு மகிழுகின்ருேம். விசுவாசமென்ற அகழியிலே இதுவரையும் ஒதுங்கியிருந்து இப்போது மீண்டும் சுவிசேஷத்தொண்டு ஆற்றுவதற்கு வெளிகொண்டிருக்கும் அஞ்சாநெஞ்சம்படைத்த தெய்வீக தூதுவர்களான குருமார் எல்லாருக்கும் நாம் சோபனங்கூறுகின்ருேம். இவர்கள்வரிசையிலே இருந்தவர்களில் நூற்றுக்கணக்கான பரிசுத்த தேவதொண்டர்கள் யுத்தங்காரணமாகப் பலியானதை நினைவுகூர்ந்து பெரிதும் ஆசாரத்துடன் அவர்களுக்குத் தலைவணங்குகின்ருேம். இப்படிப் பலியானவர்களில் ஆறுபேர் மேற்றிராணிமாராவர்.

உலகம்அடங்கலும் பரவியிருக்கும் எமதுஉபகாரிகள் எல்லாருக்கும் விசுவாசப்பரப்புதற்சபையின் நாமத்தினுலே நன்றிகூறுகின்ருேம். எமது அருமையான நண்பர்களே, இந்தக்கொடிய யுத்தத்தினுல் புதுவேதநாடுகள் அடைந்துள்ள அழிவுகளை நிவிர்த்திசெய்ய வேண்டுமானுல் நாம்எல்லாரும் எமது முயற்சிகளை இருமடங்கு மும்மடங்காகப் பெருக்கவேண்டும். ஆனபடியால் விசுவாசப்பரப்புதற்சபையானது மீண்டும் ஒருமுறை உங்கள் தருமத்தை இரந்து உங்களை நோக்கித் தனதுகைகளை நம்பிக்கையுடன் நீட்டுகின்றது. அச்சபையின் நம்பிக்கை வீண்போகாது இருக்கச் செய்யுங்கள். எத்தனையோ ஆலயங்கள், மேற்றிராணிமாரின் வாசஸ்தலங்கள், குருமனைகள், குருமடங்கள், கன்னியாஸ்திரிமடங்கள், கல்லூரிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள், அனுதசாலைகள்ஆகிய இவைகளெல்லாம் இப்போது இடிந்து தகர்ந்து அழிவின் குவியலாகக் கிடக்கின்றன. காரியமில்லை! எமது திருவேதம் ஒன்றுமே இப்போது உயிரோடிருக்கின்றது. அம்மட்டா! முன்னிலும் எத்தனையோமடங்கு கூடுதலான மகிமையுடன் அது புதுவேதநாடுகளில் பிரபைகாலித்துக்கொண்டிருக்கின்றது.

எமது மிஷனரிமார் ஏறக்குறைய எல்லாவற்றையுமேஇழந்துவிட்டார்கள். ஆனுல் அவர்கள் இழந்துவிடாதிருப்பது தேவ பராமரிப்பில் அவர்களுக்குள்ள அணைகடந்தநம்பிக்கையும், எப்படியோ கத்தோலிக்க விசுவாசிகள் தங்களுக்குத் துணைபுரிவார்களென்ற நிச்சயமுமேயாகும். பசிபட்டினியால் வாடிவதங்குவதென்ருல் என்னவென்பதை அவர்கள் நன்கறிவார்கள். சிலமீசாங்களிலே அவர்களுடைய தாபரிப்புக்குரிய வழிவகைகள் ஒன்றுமேயில்லை. தமது குருமாருக்கும் குருமடமாணவருக்கும் ஒருபிடி அன்னம் அளிப்பதற்காக ஒரு மேற்றிராணியார் தமதுமேற்றிராசனக் கோயிலிலே இருந்துவந்த ஐந்துபெரிய மணிகளையும் விற்கவேண்டியவரானுர். இன்னெரு மேற்றிராணியாரையும் அவர் குருமாருள் ஒருவரையும் சத்துருக்கள் சிறைப்படுத்தித் தெருவீதிகளைப்பெருக்கிச் சுத்தஞ்செய்யும்படி கட்டாயப்படுத்தினுர்கள்.

விசுவாசப்பரப்புதற் சபைக்குச்சேர்ந்த பணத்தை நாம் பங்கிடுசெய்யும்பொழுது, ஆகப்பெரும் அவசியமுள்ளவர்களுக்கு அதிகமாகவும், அவசியம் குறைந்தவர்களுக்குக் [..]றைவாகவுமே பணத்தைப் பிரித்[..]கொடுப்போம். ஆனுல், இரண்டா[..] வரிசையிலுள்ள இந்தமீசாங்களும் பாதுகாக்கப்படவேண்டும். விசேஷமாகச் சுதேச குருக்களைப்பயிற்றும் குருமடங்களில் அக்குருமட மாணவரின் கல்விசம்பந்தமாய் எவ்விதஇடையூறும் ஏற்படவிடாது நாம் பாதுகாத்துக்கொள்ளுதல்வேண்டும். குருமடங்களைப்பற்றிப் பேசுமிடத்து ஒரு மேற்றிராணியார் எமக்கு எழுதியதை நாம் இங்கு உங்களுக்கு அறிவிக்கிருேம். "தாபரிப்புக்கு ஏற்றவருமானம் ஒன்றுமே இல்லாதபடியாலும், உணவுப்பொருட்களின்விலை அளவுபிரமாணமில்லாது அதிகரித்தமையாலும் நான் எனது சின்னக்குருமடத்தை மூடவேண்டியதாயிற்று. பெரியகுருமடத்தின்பாடும் விரைவில் அவ்வாருகுமென்றே அஞ்சுகிறேன்" என அவர் எமக்குப் பெரும் வியாகுலத்துடன் அறிவித்திருக்கிருர்.

உலகத்தின் அதிதூரமான மூலைமுடக்குகளிலே இருக்கும் யுத்தகைதிகளுக்கும், தேசாந்திரிகளுக்கும், மிஷனரிமாருக்கும் எமது பரிசுத்தபிதா தாராளமான தருமம் அனுப்பிப், பிறர்சிநேகக் கிரிகைகளுக்கு மகாஉன்னதமான முன்மாதிரிகை காண்பித்திருக்கிருர். கிறீஸ்த மிஷனரிமாருக்குச் சிலபிற சமயவாதிகள்செய்திருக்கும் பேருபகாரம் பெரிதும் பாராட்டத்தக்கதே. வெடிகுண்டுகளினுல் அழிவுக்குள்ளான ஒரு பட்டணத்தில் தேவாதீனமாகத் தப்பியிருந்த கார்மேல் கன்னியாஸ்திரிமடமொன்றிருந்தது. அங்குள்ள கன்னியாஸ்திரிமார் உணவுப்பஞ்சத்தினுல் சொல்லரியகஷ்டம் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். இதனையறிந்து மிகவும் அனுதாபங்கொண்ட சில பிறசமயப் பெண்மணிகள் அவ்வூர் மேற்றிராணியாரிடஞ்சென்று யுத்தம்முடியுமட்டும் தாங்கள் அந்தமடத்துக் கன்னியர்களைத் தாபரிப்பதாக வாக்களித்தார்கள்.

மிஷனரிமார் தங்கள் தேசத்தையும் வீடுவாசல்களையும் இனசனர்களையும் விட்டுவிட்டு அந்நியநாடுகள்சென்றுபரித்தியாக சிந்தையுடன் தொண்டாற்றிவருவதைக்காணும் பிறசமயவாதிகள் தம் மனுத்தன்மைகாரணமாக அவர்களில் இரங்குகிருர்கள். ஆனுல், கிறீஸ்தவர்களுக்கு இதிலும் விசேஷமான முகாந்திரம் உண்[..]. திருச்சபையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய மங்கைக்குப் புறம்பேயிருந்து ஆன்மபசிபட்டினியால் வாடிவதங்குபவர்களுக்கு இரட்சணியமாகிய வரப்பிரசாதத்தைக் கிடைக்கச்செய்யும்படி திருச்சபையானது உலகின் நானுபக்கங்களிலும் செய்துவரும் முயற்சிகளில் நாங்களும் பங்காளிகள் ஆகலாமே. புதுவேதநாடுகளுக்குத் தருமஞ்செய்வதில் நாம் ஈடுபடுவதற்கு இது எவ்வளவு காத்திரம்மிக்க ஒருமுகாந்திரம். அரியநண்பர்களே, புதுவேதநாடுகளுக்குத் துணைபுரிதல் எங்களுக்கு மனமகிழ்ச்சிதரும் செயலாவதுடன் அது **எமது மனச்சாட்சியைப்பொறுத்த பரிசுத்த கடமையுமாகும்.**

சென்ற வைகாசிமாசம் 12-ந்திகதி எமது பரிசுத்தபிதா ஆகாயவசனிமூலமாக உலகம் முழுவதுக்கும் பேசியவிடத்து "இந்த யுத்தத்திற் பலியாக்கப்பட்டவர்களின் சமா[illegible]கள் அருகில் நாம் நினைவின்வழியாக முழந்தாளிடுகின்றோம். மனுத்தன்மை சற்றுமில்லாது சித்திரவதை செய்யப்பட்டும், பசிபட்டினியாலும் வேறுபல நிர்ப்பந்தங்களினுலும் பலியாக்கப்பட்டும் எண்ணிக்கையில்லாதவர்கள் புதைக்கப்பட்ட குழிகள்அருகில் முழந்தாளிடுகின்றோம். அவர்களுடைய இரட்சகரும், நடுவருமாயிருக்கும் யேசுநாதசுவாமி அவர்கள்மட்டில் இரக்கம்நிறைந்த அன்புள்ளவராக இருக்கும்படி எமது செபத்திலும், விசேஷமாகத் திவ்விய பூசைப்பலியிலும் அவர்களுக்காகவேண்டிக்கொள்ளுகிறோம்" என்று சொல்லியிருக்கிறார். எங்கள் அருமைப்பிதாவின் வாஞ்சையை நாமும் எங்கள் வாஞ்சையாக்கிக் கொள்வோமாக. எங்கள் செபங்களினுலும், வேதப்பரப்புதல்விஷயமாய் நாம்செய்யும் தருமக்கிரிகைகளினுலும் யுத்தத்தில் இறந்துபோனவர்களின் ஆன்மஇளைப்பாற்றிக்குத் துணைபுரி[illegible]மாக. நேற்று உலகமுழுவதும் [illegible]மரணஇராச்சியமாக இருந்தது. இன்[illegible]றைக்கு நாம்அதைச் சீவியத்தின் இராச்சியமாக மாற்றிவிடவே[illegible]டும்.

## சுதேசவர்த்தமானம்

சந்தியோகுமையோர்பந்தி — யாழ்ப்பாணம், சென் வின்சென்ற் டீ போல் சபையைச்சேர்ந்த சந்தியோகுமையோர் பந்தியின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளைநின்றுவரும் 7-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் சென் ஜேம்ஸ்பாடசாலை மண்டபத்தில் நடந்தேறும். அவ்வேளை வண. பி. தீயோகுப்பிள்ளை சுவாமியார் "சகோதரவாஞ்சையும், சென் வின்சென்ற் டீ போல் தருமசபையும்" எனும் விஷயமாய் ஓர் சொற்பொழிவாற்றுவார். பந்தியின் அபிமானிகளும், உபகாரிகளும் கூட்டத்துக்குச் சமுகங்கொடுக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஓர் பகிரங்ககூட்டம்— சிங்கப்பூரிலும் மலாய்நாட்டிலும் பெருங்கஷ்டநஷ்டத்துக்குள்ளாய் வருந்துகின்ற எமது சகோதரர் சகோதரிகளுக்கு உதவிசெய்யும் வழிவகைகளைப்பற்றி ஆலோசிப்பதற்காக யாழ்ப்பாண நகரமண்டபத்திலே அகில-இலங்கைத் தமிழர் காங்கிரஸின் யாழ்ப்பாணக் கிளைச்சங்க ஆதரவில் நாளை 6-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் 4. 30 மணிக்கு யாழ்ப்பாணமக்களின் பகிரங்ககூட்டமொன்று நடந்தேறும். அதிலே பல பெரியார் சொற்பொழிவாற்றுவார்கள். எல்லோரும் சமுகமளித்துக் கூட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றிவைக்கும்படியாய் அவ[illegible]டன் வேண்டப்படுகின்றார்கள்.

பண்டிதர் சவிரிமுத்து—சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்களில் ஒருவராயிருந்து இளைப்பாறி மலாய்நாடுசென்று அங்கே வசித்திருந்தவரான பண்டிதர் பி. சவிரிமுத்து அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தமது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்திலே, சிங்கப்பூரில் தாமும் தம்முடைய சனங்களும் சேமமாகவும், நல்ல சுகபலமாயும் இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். இன்னும் அவர் யாழ்ப்பாணச் செய்திகளைஅறியப் பெரிதும் அங்கலாய்ப்புற்றவராய், இங்குள்ள தமது நண்பர்கள் பல[illegible]ரயும்பற்றி விசாரணை செய்திருக்கின்றார்.

இலவச கல்வித்திட்டம்—இந்த ஐப்பசிமாசம் 1-ந்திகதியாகிய சென்ற திங்கட்கிழமை புதிய இலவச கல்வித்திட்டம் அனுசரணைக்கு வரலாயிற்று. இலங்கையிலுள்ள உதவிப்பணம்பெறும் 200 கலாசாலைகள் கல்லூரிகள்வரையிலே இத்திட்டத்தில் சேர்ந்திருக்கின்றன. அதாவது இந்த இருநூறும் இலங்கையிலுள்ள உதவிப்பணம்பெறும் கலாசாலைகள் கல்லூரிகளில் முக்காற்பங்காகும். கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் முதலாம் இடங்களிலுள்ள சிலபெரிய கல்லூரிகள் இத்திட்டத்தில் சேர்ந்துகொள்ளவில்லை. யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள 84 கலாசாலைகள் கல்லூரிகளில் இரண்டு மாத்திரமே அதிற்சேரவில்லை. இன்னும் அன்றுமுதல் ஆங்கிலகலாசாலைகள் கல்லூரிகள் எல்லாவற்றிலும் ஆரம்ப வகுப்புகளாகிய முதல் ஐந்துவகுப்புகளிலும் தாய்ப்பாஷை மூலமே கல்விகற்பிக்கப்பட வேண்டுமென்ற பிரமாணமும் அனுசரணைக்கு வந்திருக்கிறது.

பழையநேரம்—யுத்தம் நடைபெற்ற காலத்திலே இந்தியாவிலும் இலங்கையிலும் வழமையானநேரம் ஒருமணித்தியாலத்தாலே முன்தள்ளிவிடப்படலாயிற்று. இந்தியாவிலே இந்தப்புதியநேரம் இம்மாசம் 17-ந்திகதியுடன் நின்றுவிடுமென்றும், அதன்மேல் பழையநேரமே அனுசரணைக்கு வருமென்றும் செய்திஎட்டியிருக்கிறது.

கடுதாசி—புடவைக் கட்டுப்பாடு—இலங்கைக்குத் தேவைப்படும் பலவித பொருட்களிலே இப்போது அதிகமாகவந்து இறக்குமதியாகத் தொடங்கியிருக்கும் பொருட்களைப் பகிர்ந்துகொடுக்கும்கட்டுப்பாட்டை அரசினர் நீக்கிவிட ஆயத்தப்படுகின்றனர். ஆனால், இன்னுமே குறைவாகவந்து இறக்குமதியாகும் முக்கியமான பொருட்களைப் பகிர்ந்துகொ[illegible]க்கும் கட்டுப்பாடு இன்னும் சிலகாலத்துக்கு நீடித்திருக்கும். கட்டுப்பாடு நீக்கப்படும் பொருட்களின் இடாப்புஒன்று விரைவிலே வெளியாகவிருக்கிறது. கடுதாசி, புடவை வரத்து திருப்திகரமாகிறவரையிலே இவற்றிற்குள்ள கட்டுப்பாடுகள் மேலும் சற்றேகூடியகாலத்துக்கு நீடித்திருக்கும். ஆனால், புடவைக்கட்டுப்பாட்டிலும்பார்க்கக் கடுதாசிக்கட்டுப்பாடு விரைவிலே நீக்கப்படும்போல் இருக்கிறது

## அர்ச். இசிதோர் திருநாள்

முருங்கன்பதியிலே இலங்கித்திகழும் கிறீஸ்து இராசாவின் ஆலயத்தில், கமக்காரரின் பாதுகாவலரான அர்ச். இசிதோர் திருநாள் வழமைபோலச் சென்ற புரட்டாசிமாசம் 30-ந்திகதி ஞாயிறன்று மிகுந்த பத்தியருட்சியாய்க் கொண்டாடப்பட்டது. ஆலயமானது அகமும் புறமும் பலவர்ணப் புஷ்பங்களாலும், பசுந்தளிர்களாலும் அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்தது. ஆயத்ததினங்களில் வேஸ்பர்பாடப்பட்டது. திருநாளன்றுகாலை பன்னூற்றுக்கணக்கான விசுவாசிகள் சமுகமாக வண. ஸ்ரனிஸ்லாஸ் சுவாமியாரால் பாடற்பூசை நிறைவேறியது. தொகையானோர் திருப்பந்தியமர்ந்தனர். பூசையின்பின் ஆலயமணியொலிக்க, வாத்தியமிசைக்க பாடகர்குழாம் பஜனைசெய்ய, பள்ளிச்சிறார் பவனிசெல்ல, பக்தர்செபத்துடன் முன்செல்ல அர்ச்சியசிஷ்டரின் திருச்சுரூபம் அழகிய கேடையத்தில் எழுந்தருளப்பண்ணிச் சுற்றுப்பிரகாரஞ்செய்யப்பட்டது. ஈற்றில் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பெற்றுச் சகலருக்கும் அளிக்கப்பட்ட அரியதோர் விருந்துடன் திருநாள் முடிவெய்தியது.

ஞா. இமெல்டா

## அர்ச். கப்பலேந்திமாதாபதி கட்டைக்காடு

யேசுவின் சிறியபுஷ்பத்தின்திருநாள் சென்ற புரட்டாசிமாசம் 30-ந்திகதிஞாயிறுவாரம் பத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. அதற்குமுந்திய நோவனைகள் 21-ந்திகதி ஆரம்பமாயின. 29-ந்திகதி மாலை 7 மணிக்குச் சலாப மேற்றிராசனத்தைச்சேர்ந்த போளவத்தைக் கட்டளைக்குரவராகிய வண. ஜோண் அல்போன்ஸ் சுவாமியவர்களால் வேஸ்பர் பாடப்பட்டு, அவராலேயே மறுநாட்காலை 7. 30 மணிக்குப் பாடற்பூசையும் நிறைவேறியது. அத்தருணம் இவ்வூர்க் கட்டளைக்குரவராகிய வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியார் சிறியபுஷ்பத்தின் சீவியவரலாற்றைக் குறித்துப் பக்திப்பரவசம் ததும்பப் பண்பட்டதமிழில் அரியதோர் பிரசங்கம் செய்தருளினர். பின்னர் அன்[illegible] பிற்பகல் 5 மணிக்குத் திருச்சுரூபத்தை மிகவும்பக்திவிநயத்துடன்வீதி கொண்டு சுற்றுப்பிரகாரஞ்செய்து ஆசிலைய அன்புடன் பெற்றபின்னர் இவ்வூருக்கு ஓர் அதிதிபோல வந்திருந்து அனைவரையும் மகிழ்வித்த வண. ஜோண் அல்போன்ஸ் சுவாமியாரையும் கட்டளைக்குரவரையும் திரண்டசனக்கூட்டம் வாத்தியகீத வரிசைகளுடன் ஊர்வலமாக அழைத்துச்சென்று கடற்கரையோரத்திலே இருவருடையவும் திருக்கர ஆசீர்வாதம்பெற்றுத் திரும்பியது.

எஸ். வீ. தாவீதுப்பிள்ளை

## யாழ்ப்பாண நகரசபை விளம்பரம்

இதன்பின்னுற் சொல்லப்படும் சந்தைகளும், காலையும், பெரியகடைக்குக் கிட்ட இருக்கும் பஸ் ஸ்ரான்டும் 1946-ம்ஆண்டு தைமாதம் 1-ந்திகதி தொடக்கம் ஒரு வருஷத்துக்குக் குத்தகையாகக் கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்பட்டு இருக்கின்றன. 1-ம் 6-ம் குத்தகைகளுக்கு 500/-ரூபாயும், 2-ம் 3-ம் 4-ம் குத்தகைகளுக்கு 250/- ரூபாயும், மற்றச் சந்தைகளுக்கு 50/- ரூபாயும் கட்டி எடுத்த போமில் கேள்விகேட்க வேண்டும். கே[illegible]ப்பத்திரங்கள் ஒரு கடுதாசிக்கூட்டில் [illegible]டைக்கப்பட்டு, கூட்டின் மேல்பக்கத்[illegible] இடதுபுறமாய்ச் சந்தைக்குத்தகையின் [illegible]கேள்விப்பத்திரமென்றுஎழுதி அதை நகரசபைத் தலைவருக்கென விலாசம்போட்டு 1945-ம் ஆண்டு ஐப்பசிமாசம் 26-ந்திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்குப் பிந்தாமல் நகரசங்கக் கந்தோருக்கு அனுப்பிவைக்கவேண்டும். ஒவ்வொரு குத்தகைக்கும் புறம்பான கேள்வி கேட்கவேண்டும். சபையால்தெரியப்பட்ட கேள்விக்காரன் தெரியப்பட்ட திகதி தொடக்கம் 3 நாளைக்குள் கேள்வித்தொகையில் மூன்றில் ஒன்றைக் கட்டவேண்டும். 1945-ம்ஆண்டு மார்கழிமாசம் 1-ந்திகதிக்குமுன் கேள்வித்தொகையில் முன்க[illegible]ட்டப்பட்ட தொகையைநீக்கி மிகுதித்தொகையை முழுமையாகவே **5-ம் 7-ம் 8-ம் 9-ம் 10-ம்** சந்தைகளுக்குக் கட்டவேண்டும். மற்றச்சந்தைகளுக்கு குத்தகைகாரர் ஒவ்வொருவரும் நொத்தாரிசுச் செலவும் முத்திரையும் தான்பொறுத்து 1945-ம்ஆண்டு மார்கழிமாதம் 1-ந்திகதிக்குமுன் பிணைஉறுதியும் எழுதிக்கொள்ள வேண்டும். இதன் நிமித்தமாக 1-ம் 2-ம் 3-ம் 4-ம் 6-ம் குத்தகைகளுக்குக் கேள்விகேட்கும் போமுக்குக் கட்டும்காசுடன் இன்னும் ஒரு 150/- ரூபாய் ஒவ்வொரு குத்தகைக்கும் கட்டவேண்டும். அப்படிக் காசுகட்டத் தவறினல் போம்கொடுக்கப்படமாட்டாது.

மிகுதியான தொகையை 8 சரிபங்காகப்பிரித்து 8 மாதத்தில் கட்டவேண்டும் ஒவ்வொரு மாதமும் 15-ந் திகதிக்குமுன் கட்டவேண்டும். முதல்கட்டு 1946-ம் ஆண்டு தைமாதம் 15-ந் திகதிக்குமுன்னும் குத்தகையைப்பற்றிய விபரங்கள் அடங்கிய நிபந்தனைகளிற் சொல்லியபிரகாரம் கட்டவேண்டும். அப்படிக் காசுகட்டத்தவறினல் அல்லது சொல்லப்பட்ட திகதிக்குள் பிணைஉறுதி எழுதப்பிந்தினல் கட்டியமுழுத்தொகையும் பறிமுதலாய்ப் போய்விடும். குத்தகையும் திரும்பவிற்கப்படும்.

சபைக்கு எந்தக்கேள்வியையாகுதல் அல்லது எல்லாக்கேள்வியையும் விலத்திவிட அதிகாரமுண்டு. நிபந்தனைகள் இந்தக் கந்தோரில் ஒட்டப்பட்டு இருக்கின்றன. இன்னும் மேலதிகமான விபரங்களை நகரசபைக் காரியதரிசியிடம்அறிந்[illegible] கொள்ளலாம். சந்தைக்குள் இப்பொழு[illegible] அறவிடப்படும் விகிதங்கள் குறைக்கப்படமாட்டாது. சபைத்தலைவருக்கு சந்தைக்குள் வெவ்வேறு வியாபாரத்துக்கு வெவ்வேறு இடங்கள் வகுத்துவைக்க அதிகாரமுண்டு. குத்தகைக்காரனும் கீழ்குத்தகைக்காரனும் சபைத்தலைவரின் தீர்மானத்துக்குக் கட்டுப்படவேண்டும்.

### சந்தைகள்

1. பெரியகடை (நாலுபக்கமும்ரோட்டு தகரக்கொட்டில்கள் பிறநீங்கலாக) அத்துடன் தகரக்கொட்டிலுக்கும் ரோட்டுக்கும் இடையிலுள்ள வெளிஇடமும் பிறநீங்கலாக. அத்துடன் புத்தகசாலைகளும் சர்பத்சாலைகளும் பிறநீங்கலாக.
2. பெரியகடைக்குக் கிட்டஇருக்கும் மீன்கடையும் (பண்ணைத்துறையில் மீன் விற்கும் இட[illegible])
3. சின்னக்கடை-(இறைச்சிக்கடைகள் பிறநீங்கலாக) அத்துடன் இப்போ மீன் விற்கும் இறைச்சிக்கடையும் பிறநீங்கலாக
4. செங்குந்தர்சந்தை இரண்டு அறைகளுடனும்.
5. சிவியாதெருச்சந்தை—பாஷையூர் கடற்கரையில் மீன்விற்கும்இடமும்(அறை பிறநீங்கலாக)
6. பெரியகடைக்குக் கிட்டஇருக்கும் காலையும் பஸ் ஸ்ரான்டும்.
7. தட்டாதெருச் சந்தை— (சிவப்பிரகாசம்ரோட்டு தச்சஒழுங்கைச் சந்தியில் காய்பிஞ்சும் மீன்விற்கும் இடமும் பிறநீங்கலாக. அத்துடன் தட்டாதெருச்சந்தையின் மேற்குப்புறமாக தில்லையம்பலத்துக்குக் குத்தகையாகக்கொடுத்த 2 பரப்புநிலம் பிறநீங்கலாக).
8. முத்திரைச்சந்தை
9. கொழும்புத்துறைச்சந்தை
10. நாவாந்துறைச்சந்தை

க. பொன்னம்பலம்
நகரசபைத் தலைவர்

[illegible]கரசபை கந்தோர்
யாழ்ப்பாணம், 2-10-1945-ம்ஆண்டு


## எம். வி. முருகேசு மருந்துச்சாலை

சிவியாதெரு, யாழ்ப்பாணம்

சகலவிதமான விய[illegible]திகளுக்கும் சிகிட்சை செய்யப்படும். நேரிலோ, கடிதமூலமாகவோ மேற்படி மருந்துச்சாலையில் ஓர்முறை ஆலோசியுங்கள்.

காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரையும் ஏழைகளுக்கு இலவச வைத்தியம் செய்யப்படும்.

# GREETINGS OF PEACE AND PLENTY!

## COUPON-FREE SAREES & SILKS

* BENARES SAREES
* JARI GEORGETTE SAREES
* FISH NET SAREES
* TISSUE SAREES
* "All-silver" & "All-gold" SAREES
* "White" BRIDAL SAREES
* RICH JACKET MATERIALS
* MAROCAIN
* CREPES
* PRINTED & PLAIN ART-SILKS
* SILK LINENS
* "Prince of Wales" Checked SHIRTING
* GREY FLANELS
* FANCY SOCKS
* GENTS' WHITE HANKIES.
* FINE NET for VAILS 54" wide.

# NOVELTY SILK STORE

(THE SHOP FOR NOVEL SELECTION)

Main Street, JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திமாவில் தேவதாயாரின் காட்சி

(ஞா. அ.)

முடிவுரை

போர்த்துக்கால்தேயத்திலே, பத்திமா என்னும் பங்குவிசாரணைக்குட்பட்ட கோவா டெ ஐறிய என்னும் இடத்திலே 1917-ம்ஆண்டிலே, முதலாவது உலக யுத்தம் மனிதர் யாவரையும் பாதித்து நின்ற நாட்களிலே, வைகாசிமாசத்திற்கும் ஐப்பசிமாசத்திற்கும் உட்படச் செபமாலைநாயகி மூன்று சிறுபிள்ளைகளுக்கு அளித்த காட்சிகளைப்பற்றிய வைபவங்களை மிகவும் சுருக்கமாக இப்பத்திரிகையிலே விபரித்தேன். இதற்கு இடந்தந்த பத்திராசிரியரையும் அவர் குடும்பத்தையும் செபமாலைஅம்மா நிரம்ப ஆசீர்வதிப்பாராக. யான் முன்குறித்ததுபோல இவைகள் யாவும் ஒரு உபகதையல்ல. உண்மையாகவே நடந்தேறிய ஒருபாரிய அற்புதம்.

"அற்புதம்! அற்புதம்! காட்சி! தரிசனம்!" என்றுமனிதர் சொல்பவை எல்லாவற்றையும் எமது மாதாவாகிய திருச்சபை "ஆம். அப்படித்தான்" என்று உடனே ஏற்றுக்கொள்வது அரிதிலும் அரிதேயாம். அப்படியான சந்தர்ப்பங்கள் வந்துநேரும்பொழுது, வெகுவிமரிசையுடனும், மிக நுணுநுணுக்கமாகவும், புத்திகலைக்கியானம் ஞானம் நிறைந்த பண்டிதர்கள், குருக்கள், மேற்றிராணிமார்களைக்கொண்டு வெகு பொறுமையுடன் யாது பரபரப்பின்றியும் அவைகளை ஆராய்ந்த பின்னரே திருச்சபை தனதுஅபிப்பிராயத்தை வெளியிடும். பல வருடங்கள் செல்லுகின்றனவேஎன்று அது யோசிப்பதுமில்லை. காலதாமசம் ஆகின்றதே என்று சிந்திப்பதுமில்லை. உதாரணமாக லூர்துகெபியிலே அர்ச். பெர்னதேத்அம்மாளுக்குத் தேவதாயார் அளித்தகாட்சிகள் உண்மையானவைகளே என்று பரிசுத்த திருச்சபையானது உறுதியுடன் கூறப் புலவருடங்கள் செல்லவேண்டியிருந்தன.

அவ்விதமான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டதின்பின்னரே, பத்திமாவில் தேவதாயாருடைய தரிசனம் மறுக்கமுடியாத அற்புதம்வாய்ந்த ஒரு சம்பவமென்றும், பத்திமாபதியின் இராக்கினியைச் சகலரும் பத்திபண்ணி வேண்டிக்கொள்ளலாமென்றும் 1930-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 13-ந்தேதியன்றே லேறியாவின் மேற்றிராணியாண்டவர் தமது அதிகாரமுறையில் பிரசுரஞ்செய்துவிட்டனர். அதாவது: மாதா தரிசனம் அளித்துப் பதின்மூன்றுஆண்டுகள் சென்றபின்னரே.

அன்றுதொடக்கம் பத்திமா போர்த்துக்கால்தேயத்தின் லூர்துஆகத் திகழ்கின்றது. தற்போது மாதா காட்சியளித்த இடத்தில் அவர் ஏலவே கேட்டுக்கொண்டபிரகாரம் அழகிய பிரமாண்டமான "பசிலிக்கா" என்ற வரிசைக்குச் சேர்ந்த ஒருஆலயம் அத்தேயத்துக் கருதினல் ஆண்டவரினல் கட்டப்பட்டிருக்கின்றது. ஆனல், பத்திமாவில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் இராக்கினியின் இன்பகுரலும், அன்பான அழைத்தலும் உலகத்தின் எத்திசையிலுமுள்ள சர்வசாதிசனரையுமே கனிவாகக்கவருகின்றன.


"1917-ம்ஆண்டு வைகாசிமாசம் 13-ந்திகதி பத்திமாபதியிலே செபமாலை இராக்கினி தமது முதற்தரிசனம் அருளிக்கொண்டிருந்த அதேசமயத்திலேயே மேற்றிராணியாராக அபிஷேகஞ் செய்யப்பெற்றவரான 12-ம்பத்திநாதர் 1942-ம் ஆண்டு ஐப்பசிமாசம் 31-ந்திகதி மனுமக்களை மாதாவின் மாசுமறுவில்லாத இருதயத்துக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும்செபத்தை ஆகாயவசனிமூலம் பத்திமா திருக்ஷேத்திரத்துக்கு அனுப்பிய அன்றுதானே சத்துருசேனை எல் அலமேன் (El Alamein) எனுமிடத்திலே அபஜெயமடையலாயிற்று. அன்றுதானே அச்சுநாடுகளின் அபஜெயமும் ஆரம்பமாயிற்று"-(பாது. 3-12-43)

எமது பரிசுத்த பிதாவாகிய பாப்பரசர் உலகத்தையும் பயங்கரத்துக்குரிய நித்தியகேட்டையே நாடிநிற்கும் ருஷியாவையும் மாசில்லாத மாதாவினுடைய அதிபரிசுத்த இருதயத்துக்கு நைவேத்தியம்செய்து ஒப்புக்கொடுத்துவிட்டார். மெய். அது போதுமா? இல்லை. கிறீஸ்துவஉலகம் பாப்பரசரினது அழைப்பைச் சிரமேற்கொண்டு ஒவ்வொரு தேசத்தினரும், சனசமூகத்தினரும், குடும்பத்தினரும் எல்லவரும் தங்களைத் தேவதாயாரினது அதிபரிசுத்த இருதயத்துக்குத் தனித்தனி நைவேத்தியம்செய்து ஒப்புக்கொடுத்தல் வேண்டும். அதுவும் அடிக்கடிசெய்தல்வேண்டும்.

இனிவரும்காலமோ உலகத்திற்கும் வேதவிசுவாசத்திற்கும் மிகவும் ஆபத்தானகாலம். அந்த ஆபத்துக்களிலிருந்து எம்மைக்காக்க மாதாவின் இருதயத்துக்கு அணைகடந்த ஆவலுண்டு. ஆற்றலுண்டு. தேவதாய் எமக்குந்தாய். எங்கள் அழுகைக்குரல் அவவுடைய கனிந்த இருதயத்தை ஊடுருவிச்செல்லும். அவரினது வேண்டுகோளை எங்கள் ஆண்டவர் ஒருபோதுமே புறக்கணிக்க இயலாது. ஆகவே அவர் விரும்பியபடியே அவரினது அன்புள்ள இருதயத்தில் நாம் பத்திவைத்து, பரிசுத்தசெபமாலையை எமதுகேடையமாகக்கொண்டு அவருடைய தயையையும் தஞ்சத்தையும் என்றுமே இறைஞ்சிநிற்போமாகில், எவ்வித ஆபத்தும் எங்களைப் பாதிக்கமுடியாது. எமது திவ்விய இரட்சகரும் இதையே ஆசிக்கின்றார். ஆமென்.

முற்றிற்று

## சிலுவைவீரர் கோணம்




அருமையான முதிர்ந்த, இளைய சிலுவை வீரர்களே!

இதோ ஐப்பசிமாதம் பிறந்துவிட்டது. கத்தோலிக்க ஆலயங்களிலும், இல்லங்களிலும் செபமாலைஓதும் விசுவாசிகளின் குரற்தொனி முன்னிலும் அதிகமாய்க் கேட்கப்படுகின்றது. பரிசுத்தபிதாவாம் பாப்பரசர் தொடக்கம் கடைசிக்கத்தோலிக்கன் ஈறாக எல்லாரும் இம்மாலையைச் செபிக்கிறார்கள். சிலுவை வீரனே! நீயும் அதிற் பங்குபற்றுகிறாயா? செபிக்கிறாயா? நொந்துவருந்தும் யேசுவின் திருஇருதயத்திற்கு ஆறுதல் வருவிக்கத் திவ்விய பூசைக்கு அடுக்கச் செபமாலைப் பத்திமுயற்சியே அதிஉத்தம சிறந்த பத்திமுயற்சியென்று தேவதாயார்தாமே முத்திப்பேறுபெற்ற அலெலின் என்னும் செபமாலை அப்போஸ்தலருக்குக் காட்சிகொடுத்துத் திருவுளம்பற்றினார்.

பிரிவினைக்காரர்களாலும், சமயகலாபனைக்காரர்களாலும், அரசியல்வாதிகளாலும் திருச்சபைக்கு ஆபத்துவந்தபோதெல்லாம் 13-ம் நூற்றாண்டு தொடக்கம் இந்தப் பயங்கரயுத்தம்முடிந்த இன்றுவரை பரிசுத்த செபமாலைப்பத்தியே திருச்சபையைக் காத்துவந்திருக்கிறது. அர்ச். சாமிநாதருக்குச் செபமாலை சொல்லும்வகையைக் காட்டிக்கொடுத்த அந்த அமலஉற்பவ தாயாரே லூர்திலும், எங்கள்நாட்களில் பத்திமாவிலும் செபமாலையுடன் காணப்பட்டு அப்பத்திமுயற்சியை அனுசரிக்கத் தூண்டியிருக்கின்றார். சிலுவை வீரனே! நீயும் உன் சத்துருக்களை வெல்லவேண்டுமோ? மோட்சபிரசாதங்களை ஏராளமாய் அடையவேண்டுமோ? மோட்சமுடியை நிச்சயப்படுத்தவேண்டுமோ? பத்தியாய்ச் செபமாலையைச் செபிப்பாயாக.

இப்போது எங்களை ஆண்டுவரும் பரிசுத்தபிதா 12-ம் பத்திநாத பாப்பரசர் சிறுவர் சிறுமிகளை நோக்கி: உலகம் பாழாய்ப்போகின்றது. ஆத்துமங்கள் கெட்டுப்போகின்றன. சன்மார்க்கம் தேவபத்திக்கு எதிரான கொள்கைகள் இலகுவாகப் பரவுகின்றன. இத்தீங்குகள் எல்லாம் ஒழியவேண்டுமாயின் செபமாலையைப் பத்தியுடன் செபியுங்கள் என்கிறார். அவரது குரலொலிக்கு நீயும் செவிசாய்ப்பாயாக.

செபமாலையில் அடங்கியிருக்கும் செபங்களும், தியானிக்கவேண்டிய பரமஇரகசியங்களும் எவராலும் இலகுவாக நிறைவேற்றப்படத்தக்கவை. பாலர்கள் முதலாய்த் தகுந்தமுறையாய்ச் செபிக்கலாம். இப்பத்திமுயற்சியை அனுசரிக்க எனக்கு அறிவில்லை, படிப்பில்லை, வசதியில்லை என்று எவருமே சொல்லமுடியாது. இப்பத்திமுயற்சியில் அடங்கிய இருபிரதான செபங்கள் பரமண்டலமந்திரமும் பிரியதத்தமந்திரமுமே. இவற்றை வாயால் செபிக்கும்போது மனதால் நினைத்துக்கொள்ளவேண்டிய உண்மை: மனுஷஇரட்சணிய பரமஇரகசியமே. இப்பத்திமுயற்சியை நாளாந்தம் அனுஷ்டித்துவந்தால் அதன்உருசி குறைவதற்குப் பதிலாய்க் கூடிக்கூடி ஒருவரது ஞானச்சீவியத்தை வளர்த்துக்கொண்டேபோகும்.

மேற்படி பத்திமுயற்சியை நன்முறையில் அனுசரிக்கப் பின்வருவனவற்றைக் கவனித்துக்கொள்ளல் மிக நன்றாகும்.

1. தெண்டித்து ஒருசிறு செபமாலை தேடிக்கொண்டு நாள்தோறும் அதை உன்னுடன் வைத்திருக்கப் பிரயாசப்படு.

2. செபமாலைசெபிக்கத்தெரியாவிடில் உன்பெற்றாரிடம், மூத்தசகோதரர் சகோதரிகளிடம், உன்ஆசிரியர்களிடம் செபிக்கும்முறையைக்கேட்டுத் தெரிந்துகொள்

3. இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருந்துகொண்டு கவனத்துடனும், பயபத்தியுடனும் அம்மணிமாலையைச்செபி.

4. மந்திரங்களை வாயால் உச்சரிக்கும்போது அததற்குக் குறிப்பிடப்பட்ட பரமஇரகசியத்தைச் சித்திரப்படம்போல் உன் ரூபிகரத்தில் வருவித்துக்கொள்.

5. நாளாந்தம் நூற்றைம்பத்துமூன்று மணிச்செபம் ஓதஇயலாவிடில் ஐம்பத்துமூன்றுமணிச்செபமாவது செய்யாது நித்திரைக்குப்போகாதே.

கவனிப்பு:—ஆசிரியர்களே! உங்கள் கண்காணிப்பிலிருக்கும் சிலுவை வீரர்களுக்கு இவற்றை வாசித்துவிளக்கி அவர்கள்நாளாந்தம் செபமாலைசெபிக்க முயற்சி எடுப்பீர்களாக.

### சிலுவைப்படைச்செய்திகள்

சிலுவைவீரர்களின் பாதுகாவலாளியாகிய அர்ச். மார்கரித் மரியம்மாளுக்குத் திருஇருதயநாதர் காட்சியளித்த பறேலமோனியல்மடத்து அடுத்தாரில் வீரரின் நாமங்கள் வைக்கப்பட்டுச் செபங்கள் செய்யப்பட்டுவந்தன. ஆனல், கடந்த பயங்கரயுத்தத்தால் பெயர்இடாப்புகள் அனுப்பமுடியாதுபோயிற்று. இற்றைக்கு மூன்றுமாதங்களின்முன்பு அனுப்பப்பட்ட ஐந்து பெரியஇடாப்புகள் போய்ச்சேர்ந்து அடுத்தாரில் வைக்கப்பட்டிருப்பதாக அம்மடத்தின்பெரியதாயாரம்மாள்எங்கள் வந். மேற்றிராணியாண்டவருக்கு அறிவித்திருக்கிறார்கள். இப்போதும் புதியவீரர்களின் நாமங்களை அனுப்ப ஆயத்தஞ்செய்கிறோம்.

ஆர்வம்நிறைந்த அறிக்கைகளை அனுப்புவோமென்று பல சிலுவைவீரர் ஸ்தாபனங்கள் தெரிவித்திருந்தும் கைக்கெட்டவில்லை. விசேஷமாகச் சிங்களப்பாடசாலைகளிலிருந்தே காத்திருந்தோம். சிலுவைப்படைக் காரியஸ்தர்கள் இவ்விஷயத்தில் ஊக்கங்காட்டி உதவிசெய்தாலன்றி இக்கோணம் வாசிப்போர்க்கு இன்பம் பயக்கஇயலாதென்பதை அறிவார்களாக.

காரியதரிசி

மேற்றிராணியார் மாளிகை

யாழ்ப்பாணம், 1-10-45


# பஸ்றியன்

அன் கம்பெனி லிமிட்டெட்

## புதிய விலாசம்

எல்லா வாடிக்கைக்காரர்களுக்கும், மொத்த சில்லறை பெர்மிட் வைத்திருப்பவர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்வது யாதெனில்:-

எங்களுடைய

**பதிவுசெய்யப்பட்ட**

**கந்தோரையும், ஸ்தாபனத்தையும்**

கொழும்பு பழைய சோனகர் தெரு 81-ம் இலக்கத்திலிருந்து

**கொழும்பு புதிய சோனகர் தெரு**

**87 & 89 இலக்கங்களிலிருக்கும்**

**"பஸ்றியன்ஸ்"**

கட்டிடத்திற்கு மாற்றிவிட்டோம்

இந்த கம்பெனிக்கு அனுப்பப்படும் கடிதப்போக்குவரத்து முதலியவைகள், மேற்குறிப்பிட்டுள்ள புதிய விலாசத்திற்கே அனுப்பப்படவேண்டும்.

கொண்டாட்டவைபவங்கள், பொதுக்கூட்டங்கள்,
தேர்தல் பிரசாரங்கள், சங்கீதக்கச்சேரிகள்,
கோவில் விசேஷங்கள், இவைகளின்போது
ஒலிபெருக்கி அமைக்க விரும்புகிறீர்களா?
உங்கள் இடங்களில் மின்சார வசதி இல்லையே
என்ற கவலைவேண்டாம்

**பஸ்றியன் கம்பெனி லிமிட்டெடைக்**

கலந்து கொண்டால்

மின்சார வசதி இல்லாத இடங்களிலும், ஒலிபெருக்கி
வசதி செய்துகொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.


### நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். றீத்தம்மாளிடமும் இன்னுஞ்சில அர்ச்சியசிஷ்டர்களிடமும் எனது மகன சோதனையில் அரங்கேறும்படி நேர்த்தி செய்து வேண்டினேன். அதின்படி சோதனையில் சித்தியடைந்ததினல் நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். இவ்வர்ச்சியசிஷ்டர்களின் நாமம் புகழப்படுவதாக.

யாழ்ப்பாணம் ஜோ. அ.

### நன்றியறிந்தஸ்தோத்திரம்

அற்புதவரத்தரான அர்ச். ஆரோக்கியநாதரிடம் நான் கேட்டமன்றாட்டு கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். அவரின் நாமம் புகழப்படுவதாக.

யாழ்ப்பாணம் A. S. I. C.

### நன்றியறிந்தஸ்தோத்திரம்

அற்புதவரத்தரான அர்ச். ஆரோக்கியநாதரிடம் நான்கேட்ட மன்றாட்டு கிடைக்கப்பெற்றேன். நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். அவரின் நாமம் புகழப்படுவதாக.

யாழ்ப்பாணம் M. S.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffan, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises Main Street Jaffna, on Friday, October 5, 1945.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org